ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/48 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදදා - 2018.09.12

*2088/48 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின்**
***16 (2ஈ)* பிரிவின் கீழான அறிவித்தல்**

**உத்தேச *112* அலகு கொண்ட தொடர்மாடி வீட்டு கட்டிடத் தொகுதி,**
**இல. *460*, கொழும்பு வீதி, உஸ்வெட்டகெய்யாவ.**

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 08, டீ. எஸ். சேனநாயக்க மாவத்தை, இல. 75, பிரைம் லேண்ட் தனியார் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட உஸ்வெட்டகெய்யாவ, கொழும்பு வீதி, இல. 460 எனும் இடத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேச 112 அலகுகளைக் கொண்ட தொடர்மாடி வீட்டு கட்டிடத் தொகுதி செயற்றிட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலணைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2018.09. 12 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.coastal.gov.lk மூலமும் இந்த அறிக்கை மூன்று மொழிகளிலும் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. *மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு - இல. 500, டி. பீ. ஜயா மாவத்த, கொழும்பு 10.*
2. *கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் -*
   *புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.*
3. *மத்திய சுற்றாடல் அதிகார சபை - இல. 104, "பரிசர பியச" டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.*
4. *நகர அபிவிருத்தி அதிகார சபை - 6 மற்றும் 7 ஆவது மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்ல.*
5. *மாவட்டச் செயலகம் - கம்பஹா.*

1A - G 28518 - 27 (2018/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. பிரதேச செயலகம் - வத்தளை.

7. பிரதேச சபை - வத்தளை.

8. கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - மாவட்ட அலுவலகம், நீர்கொழும்பு.

9. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் -
பிரதேச அலுவலகம், இல. 452, கொழும்பு வீதி, குரண.

இந்த உத்தேச அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2018.09.12 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலை பேசி இல. 011-2449754, 011-2449197, 011-2387922,
தொலை நகல் இல. 011-2438005, 011-2472623.

9 - 757